**01.12.2022**

**OS.No. 188/2018 PW : 1, திரு. ராஜா (எ) உமாமகேஸ்வரன்**

**1, 3, 20 மற்றும் 21 பிரதிவாதிகள் தரப்பல் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

நான் 1, 2 பிரதிவாதிகளுடன் கடந்த 2001ம் வருடம் வரை கூட்டுகுடும்பமாக ஒரே வீட்டில் குடியிருந்தேன். கடந்தமுறை குறுக்கு விசாரணை சாட்சியம் அளித்த பின்னர் கூட பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார்கள் என்று நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. பிராதின் ஏ அட்டவனை சொத்துக்கள் என் தந்தையின் பூர்வீக சொத்துக்கள் ஆகும். பி அட்டவனை சொத்துக்களை நானும், என் சகோதரர்களும் ஒன்றாக இருந்தபோது வாங்கினோம். சி அட்டவனை சொத்துக்கள் 1ம் பிரதிவாதி அவரது மனைவி மற்றும் மக்களுக்கு எழுதி வைத்த சொத்தாகும். பி அட்டவனை சொத்தில் எனக்கு தெரிந்தவரை சொத்துக்களை காட்டிவிட்டேன். பி அட்டவனை சொத்துக்களை யார் யாரிடமிருந்து எப்போது எவ்வளவு தொகைக்கு வாங்கினோம் என்று நான் பிராதில் சொல்லவில்லை. 6ஆம் பிரதிவாதியான துர்கா பாய் பெயரில் சில சொத்துக்கள் இருக்கிறது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆந்திராவில் உள்ள நகரியில் கடைகள் மட்டும் காம்ப்ளக்ஸாக இருக்கிறது. நானும், 1, 2 பிரதிவாதிகளும் நகரியில் வியாபாரம் செய்து கொண்டிருந்தோம். நகரியில் எனக்கு வேறு வீடு இல்லை. என் சகோதரியான சாவித்ரிக்கு மைசூரில் சொத்து இருந்தது. அதை அவர் விற்றுவிட்டார். 1ஆம் பிரதிவாதி அனுப்பி நான் என் சகோதரியுடன் சென்று அந்த சொத்தை விற்றோம். 2ஆம் பிரதிவாதியின் முதல் மனைவி எங்கே இருக்கிறார் என்று எனக்கு தெரியும் என்றும் அவரை வேண்டுமென்றே

இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. ஏ அட்டவனை சொத்தில் என் தாயாரும், 1ஆம் பிரதிவாதியும் பயிர் செய்தார்கள். என் தாயார் இறந்தபின்னர் 1ஆம் பிரதிவாதி மட்டுமே ஏ அட்டவனை சொத்துக்களை அனுபவித்து வருகிறார். நான் அந்த சொத்துக்களை அனுபவித்ததில்லை. ஏ அட்டவனை சொத்துக்களை எங்கே இருக்கிறது என்றும் அதன் சர்வே எண்ணோ அல்லது அதன் விஸ்தீரனமோ எனக்கு தெரியாது. வி.ஏ.ஓ.விடம் 2017ல் எதற்காக ஆவணங்களை வாங்கினேன் என்று கேட்டால் சொத்து எனக்கு எவ்வளவு இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வாங்கினேன். அதன்பிறகு தான் பி மற்றும் சி அட்டவனை சொத்துக்களை பற்றி தெரிந்து கொண்டேன். இவ்வழக்கை தாக்கல் செய்தபோது இடைக்கால உறுத்துக்கட்டளை கூறி மனு செய்தேன். 4ஆம் பிரதிவாதிக்கு எதிரான இவ்வழக்கை நான் வலியுறுத்தவில்லை. அவ்விதம் இருக்கையில் 4ஆம் பிரதிவாதி வாங்கிய கிரையம் செல்லாது என்று முதல் விசாரணையில் ஏன் சொல்லியிருக்கிறேன் என்று கேட்டால் அவர் எனக்கு 1/3 பங்கு பணத்தை கொடுத்துவிட்டார். கிரைய பணத்தை பெற்றுக் கொண்ட பின்னர் அவரது கிரையம் செல்லாது என்று முதல் விசாரணையில் ஏன் சொல்லியிருக்கிறேன் என்று எனக்கு தெரியாது. 4ஆம் பிரதிவாதியிடமிருந்து மேலும் பணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்துக்கள் நகரி மற்றும் பள்ளிப்பட்டில் இருக்கும்போது எங்கே கூட்டுகுடும்பமாக இருந்தேன் என்று கேட்டால் நானும் என் சகோதரர்களும்

கூட்டுகுடும்பமாக இருந்தோம். என் தாயார் டி.டி. கண்டிகை என்ற கிராமத்தில் இருந்தார். 1987ம் வருடமே நகரியில் உள்ள வீடு மற்றும் மனைகளை தனித்தனியாக பிரித்துக் கொண்டோம் என்று சொன்னால் 2009ம் வருடம் தான் நகரியில் உள்ள கடைகளை நாங்கள் பிரித்துக் கொண்டோம். அவ்விதம் கடைகளை பிரித்துக் கொண்டதற்கு ஒரு பாகப்பிரிவினை ஆவணம் எழுதிக் கொண்டோம். அது 2009ல் ஆனது. நகரியில் அது பதிவு செய்யப்பட்டது. அந்த பாக ஆவணத்தில் சொத்துக்களை ஏற்கனவே பிரித்துக் கொண்டுவிட்டதாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதிகள் சில கடன் பிரச்சனைகள் இருந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ஆம் பிரதிவாதியின் கடன்களை 1ஆம் பிரதிவாதி அடைத்தார் என்றால் சரியல்ல. கடைகளில் என் பாகத்திற்கு கிடைத்த சொத்தை நான் 1, 2 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கொடுத்துவிட்டேன். எனக்கு உடல்நிலை சரியில்லாததாலும், ஒயின் ஷாப் நடத்தியதில் பணஇழப்பு ஏற்பட்டதாலும் அதை 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்தேன். என் மனைவி மற்றும் என் பிள்ளைகள் பெயரில் நான் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதவில்லை. என் மனைவி மற்றும் என் குழந்தை பெயரில் எழுத கூடாது என்பதற்காக 1, 2 பிரதிவாதிகள் பெயரில் எழுதி வைத்தேன். 2009ல் சொத்தை பிரிக்க வேண்டிய அவசியம் என்னவென்று கேட்டால் 1ஆம் பிரதிவாதி என்னிடம் கொடுக்கல் வாங்கலை வைத்துக் கொள்ளவில்லை மற்றும் ஊரில் உள்ள சொத்துக்களின் வருமானத்தை

அவர் மட்டும் எடுத்துக்கொண்டதால் நான் பாகம் கேட்டேன். எனக்கு ஏற்பட்ட கடன்களை நான் தான் தீர்த்தேன். 1,2 பிரதிவாதிகளுக்கு நான் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவண சொத்துக்களை அவர்கள் மீண்டும் எனக்கு 2018ல் எழுதி கொடுத்துவிட்டார்கள். அதன்பிறகு தான் சொத்து விவரங்களை சேகரித்து இவ்வழக்கையும் மற்றும் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மற்றொரு வழக்கை திருப்பதியுள்ள நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 2 வழக்குகளின் எண்களும் 188/2018 ஆகும். திருப்பதியுள்ள வழக்கு தான் முதல் வழக்காகும். 2009ல் பாகம் செய்தபோது எனக்கு மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டிருந்தது. அப்போது நான் ஒயின்ஷாப்பை நடத்தவில்லை. 2008ம் வருடத்துடன் ஒயின்ஷாப் தொழிலை நிறுத்துவிட்டேன். 2009ல் பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதும்போது எனக்கு உடல்நிலை சரியில்லை. என் மனநிலை நன்றாக தான் இருந்தது. பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதும்போது என் மனநிலை நன்றாக தான் இருந்ததா என்று கேட்டால் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் அன்று என்ன நடந்தது என்று எனக்கு தெரியாமல் இருந்தது. கடன்காரர்களிடமிருந்து சொத்தை காப்பாற்ற என் அண்ணன்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்த போது எனக்கு மனநிலை சரியாக இருந்ததா என்று கேட்டால் என் அண்ணன்கள் சொல்லிதான் நான் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்தேன். அவர்கள் கேட்டதை புரிந்து கொண்டு தான் நான் எழுதி வைத்தேன். வாசாஆ13ஐ எதற்காக தாக்கல்

செய்துள்ளேன் என்று கேட்டால் சொத்தின் சர்வே எண்ணை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். கடந்த 10 வருடமாக நாங்கள் எங்கள் தேவைக்காக பல சொத்துக்களை விற்றிருக்கிறோமா என்று கேட்டால் நான் என் தேவைக்காக 4 பிளாட்களை மட்டும் விற்றேன். நான் கிரையம் கொடுத்தபோது 1, 2 பிரதிவாதிகள் கையொப்பம் போட்டு கொடுத்தார்கள். அதுபோன்று 1, 2 பிரதிவாதிகள் அவர்கள் தேவைக்கு கிரையம் கொடுத்த போது நான் போய் கையொப்பம் போட்டு கொடுத்தேனா என்று கேட்டால் ஒரு தடவை மட்டும் கையொப்பம் போட்டு கொடுத்தேன். மைசூரில் உள்ள சொத்துக்களை விற்று தான் 3ஆம் பிரதிவாதிகள் பெயரில் சில சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. மைசூரில் உள்ள சொத்துக்களை விற்க நானும், 1ஆம் பிரதிவாதியும் சென்றோம் என்று சொன்னால் நான் மட்டும் தான் சென்றேன். சொத்துக்களை விற்க கூடாது என்று கேட்டு இவ்வழக்கில் மனு தாக்கல் செய்துவிட்டு நானே நமச்சிவாயத்திற்கு ஒரு சொத்தை விற்றேன் என்று சொன்னால் அந்த சொத்து நான் வாங்கிய சொத்து என்பதால் விற்றேன். நமச்சிவாயம் என்பவர் இவ்வழக்கில் அவசிய தரப்பினர் என்று சொன்னால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி அவரது சுயசம்பாத்தியத்தில் சொத்துக்களை வாங்கினார் என்றும் அது அவரது மனைவி, மக்களுக்கு அவர் எழுதி வைக்க முடியும் என்றால் சரியல்ல. அவர் சுயமாக சம்பாதிக்கவில்லை. வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் என்னுடன் சேர்ந்து வழக்கை தாக்கல் செய்ய வரும்படி 2ஆம் பிரதிவாதியிடம் கேட்டேன்.

1ஆம் பிரதிவாதி பங்கு கொடுப்பதுபோல் இல்லாததால் நீயே வழக்கை தாக்கல் செய்துகொள் என்று கூறிவிட்டார். 2ஆம் பிரதிவாதி 1ஆம் பிரதிவாதியிடமிருந்து சில சொத்துக்களை கிரையம் வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1987க்கு பின்னர் நானும் 1, 2 பிரதிவாதிகளும் எப்போதும் கூட்டுகுடும்பமாக இருந்ததில்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 3ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துக்கள் அவர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. ஏ அட்டவனை சொத்தில் பங்கை கொடுத்த ஆட்சேபனை இல்லை என்று 1ஆம் பிரதிவாதி கூறியுள்ளது தெரியுமா என்று கேட்டால் அவர் ஏற்கனவே அந்த சொத்துக்களில் பங்கு கொடுப்பதாக தான் சொன்னார். நான் அனைத்து சொத்துக்களிலும் பங்கு கேட்கிறேன். 2009ல் ஏற்கனவே நடந்த வாய்மொழி பாகத்தை நான் ஒப்புக்கொண்டு பாக ஆவணத்தில் கையொப்பம் போட்டதால் நான் மீண்டும் இவ்வழக்கை தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. ஒரே நேரத்தில் 2 பாக வழக்குகளை நான் தாக்கல் செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நமச்சிவாயம் என்பவருக்கு நான் கிரையம் கொடுத்த போது நீதிமன்றத்தில் வழக்குகள் இல்லை என்று பொய் சொல்லி விற்றேன் என்றால் அது நான் வாங்கிய சொத்து என்பதால் விற்றேன். 1987 மற்றும் 2009 பாகத்தை நான் மறுக்கும்போது என் சகோதரிகளுக்கும் சொத்தில் பங்கு கொடுக்க அவர்களை ஏன் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்று கேட்டால் அவர்களுக்கு விருப்பம் இல்லாததால் அவர்களை நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை.

அன்பழகன் என்பவர் வழக்கை தாக்கல் செய்ய வராதபோது அவரை 2ஆம் பிரதிவாதியாக சேர்த்து என் சகோதரிகளை மட்டும் ஏன் சேர்க்கவில்லை என்று கேட்டால் அன்பழகன் 3ல் 1 பங்கு கேட்டதால் அவரை மட்டும் சேர்த்தேன். என் சகோதரிகளுக்கு பாகம் கொடுக்க கூடாது என்று கருதி நான் அவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி அவரது மகன்களுக்கு செட்டில்மெண்ட ஏழுதி வைத்து விட்டார் என்றும் அது அமலுக்கு வந்து அவர்கள் தான் சொத்தை அனுபவிக்கிறார்கள் என்றும் பி மற்றும் சி அட்டவனை சொத்துக்களில் நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. என் சகோதரி சாவித்ரி இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் உயிருடன் இருக்கிறார். என் சகோதரி சாந்தா உயிருடன் இருக்கிறார். அவரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. அவரை சேர்க்காததாலும் பிரதிவாதிகள் சுட்டிகாட்டிய சொத்து விவரங்களை நான் பிராதில் திருத்தாததாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ஏ அட்டவனை சொத்துக்களை தவிர்த்து மற்ற சொத்துக்களை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.